## சிங்கப்பூரர்களுள் பெரும்பாலானவர்கள் பொதுநல உணர்வு கொண்டவர்கள்- இதுபற்றி உன் கருத்துகளை விளக்கி எழுதுக.

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு"

என்கிறார் நம் தெய்வப்புலவர். அதாவது அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்திய தொடர்பானது, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கைக்காகவே என்கிறார். இதை நம் சிங்கப்பூரர்கள் புரிந்துகொண்டு, பொதுநலவாதிகளாக இருக்கிறார்களா என்றால் அதற்கு உறுதியான பதில் ஆம் என்பதேயாகும். இதைப்பற்றி இனி இக்கட்டுரையில் காண்போம்.

ஒருவன் பொதுநல உணர்வு கொண்டவன் என்பதை நிரூபிப்பதற்கு முக்கியமான சான்று, அவன் மற்றவர்களுக்குச் செய்திருக்கும் உதவிகள். அப்படிச் சிங்கப்பூரர்கள் என்ன உதவிகள் செய்திருக்கிறார்கள் என்று ஆராய்வோம். முதலாவதாக பலருக்குப் பொருள் கொடுத்து உதவி இருக்கிறார்கள்.

"பணம் இல்லாதவன் பிணம்"

என்கிற இக்காலக்கட்டத்தில் இன்றியமையாத ஒன்று பொருள். ஆனால், பணமும் இல்லாமல் ஆதரவும் இல்லாமல் தவிக்கின்றனர் பலர். அப்படிப்பட்டவர்கள் வாழ்வில் ஒளி தெரிவதற்கு உதவுபவர்கள் யார்? நம் சிங்கப்பூரர்கள்! உதாரணத்திற்குச், சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் பிரதிநிதியாய் இருந்த நம் பிரதமர் திரு லீ குவான் யூவையே எடுத்துக் கொள்வோம். அவர் மதியுரை அமைச்சராகப் பதவியேற்றிருந்த காலத்தில் தனக்கு வந்த முழுச் சம்பளத்தையும் தானம் செய்துவிட்டார். இதுவே நம் சிங்கப்பூரர்களின் பொதுநல உணர்வைப் பறைசாற்றுகிறது அல்லவா?

பணம் கொடுத்து உதவுவது மட்டும் போதாது என்பதால் நம் சிங்கப்பூரர்கள் உடலுழைப்பாலும் உதவுகிறார்கள். இன்று பலர் சமூக மன்றங்கள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் தொண்டூழியம் செய்கிறார்கள். தம் சமூக நடவடிக்கைகளில் உதவுவதோடு மட்டும் இல்லாமல் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற 28ஆவது தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிக்கு 17 000 தன்னார்வலர்கள் உதவினர். மேலும், அதே ஆண்டு நடைபெற்ற "ஆசியான்" மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டிக்கு அதை நடத்துபவர்கள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே 4000 பேர் தொண்டூழியம் புரிந்தனர். இப்படி நம் சிங்கப்பூரர்களின் தொண்டூழியப் பட்டியலை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால், நம் சிங்கப்பூரர்கள் உடலுழைப்பால் மட்டும் உதவுவதில்லை! உடலுறுப்பைத் தானம் செய்தும் உதவுகிறார்கள்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்பதகேற்ப நம் நாட்டின் திரு லிம் கொக் செங் என்பவர் தனக்கு எந்த விதத்திலும் சொந்தமில்லாத 'லிம் சி ஜியா' என்ற பெண்ணுக்குக் கல்லீரலைத் தானம் செய்துள்ளார். இச்சான்றுகள் போதாதா நம் சிங்கப்பூரர்களின் பொதுநல உணர்வை எடுத்துக்காட்டுவதற்கு?

அதுவும் போதவில்லை என்றால் மூன்றாவதாக, நம் சிங்கப்பூரர்கள் உள்நாட்டவர்களுக்கு மட்டுமல்ல வெளிநாட்டவர்களுக்கும் உதவுகிறார்கள்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"

என்ற நம் கணியன் பூங்குன்றனாரின் வார்த்தைகளுக்கேற்ப சிங்கப்பூரர்கள் பாரபட்சம் பார்க்காமல் தங்களால் இயன்றதைச் செய்கின்றனர். எடுத்துக்காட்டாக, 2014ல் மலேசியாவில்

பெருவெள்ளம் ஏற்பட்டபோது நம் அரசாங்கம் 100 000 வெள்ளியை நன்கொடையாக வழங்கியது. நம் நாட்டின் செஞ்சிலுவைச்சங்க உதவியாளர்கள் உடனடியாகப் பாதிக்கப்பட்ட இடத்திற்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களை அப்புறப்படுத்தவும், சூடான உணவு, தண்ணீர், போர்வை போன்றவற்றைக் கொடுக்கவும் உதவினர். அவ்வளவு கூட ஏன்? தற்போது இவ்வையகத்தையே ஆட்டிப் படைத்துவரும் “கொரோனா வைரஸ்” ஒருவரின் மேல் தொற்றியுள்ளதா இல்லையா என்று பரிசோதனை செய்வதற்கு பயன்படுத்தப்படும் கருவிகளைச் சிங்கப்பூர், சீனாவுக்கு அனுப்பி உதவி செய்துள்ளது. தன் நாடு, தன் மக்கள் என்ற சுயநலம் இல்லாமல் உதவி புரியும் சிங்கப்பூரர்கள் பொதுநல உணர்வு கொண்டவர்களா என்ற கேள்விக்கு இப்போதும் பதில் கிடைக்காமல் இருக்க முடியமா?

இவையனைத்திற்கும் மேலாகச் சிங்கப்பூரர்கள் சாதாரணமாக வழியில் செல்லும்போது கூட உதவி தேவைப்படுவோருக்குத் தங்களால் இயன்றவற்றை உதவுகின்றனர். தற்போதைய பரபரப்பான வாழ்க்கை முறையில், சாதாரணமாக வழியில் காணும் தெரியாதோருக்குச் சிங்கப்பூரர்கள் உதவி செய்வார்களா, என்று எண்ணுவர் பலர். ஆனால், அவர்களுக்கெல்லாம் பதிலடி கொடுக்கும் விதமாக 2015ல் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பூன் கெங் சாலையில் ஒருவர் லாரியின் அடியில் மாட்டிக்கொண்டார். அப்பொழுது முப்பதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்கள் தங்கள் பாதுகாப்பைக்கூட பொருட்படுத்தாமல் அவரைக் காப்பாற்றினர். நம் சிங்கப்பூரர்களின் மனித நேயம் அப்பொழுது பலரின் மனதை நெகிழச் செய்தது. சிங்கப்பூரர்கள் பொதுநல உணர்வு கொண்டவர்கள் என்று இது நிரூபிக்கின்றது.

சிங்கப்பூர் நம் பூமியைப் போன்றது. சிங்கப்பூரர்கள் வானத்தைப் போன்றவர்கள். வானம் எப்படி பெரும்பாலும் சுட்டெரித்துக்கொண்டே இருக்குமோ அதுபோல சிங்கப்பூரர்கள் தங்கள் பரபரப்பான வாழ்க்கையில் மனவுளைச்சலோடு ஓடிக்கொண்டே இருப்பார்கள். ஆனால், வானத்திலிருந்து மழைத்துளிகளும் கொட்டத்தான் செய்கின்றது. அவை கொட்டும்போது அதன் சுகமே தனி. அதைப்போலத்தான் சிங்கப்பூரர்களின் பொதுநல உணர்வும். வானத்தில் உள்ள மேகங்களைப்போல காத்துக்கொண்டே இருக்கும். தேவையான நேரங்களில் மழைத்துளிகளைப்போல் கொட்டிச் சிங்கப்பூர் என்ற பூமிக்கு மகிழ்ச்சி என்ற சுகத்தை அளிக்கும். எனவே, சிங்கப்பூரர்களில் பெரும்பாலானவர்கள் பொதுநல உணர்வு கொண்டவர்கள் என்பதே என் கருத்தாகும்.

****************************